# டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள்! 'சமத்துவம் காண்போம்' - போட்டிகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஏப்.12-

இந்திய அரசியல் சாசனச் சிற்பி ! சீரிய சமூகச் சீர்திருத்தச் செம்மல் !அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஏப்ரல் 14ஆம் நாளை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் 10.4.2025 முதல் 30.4.2025 வரை "சமத்துவம் காண்போம்" போட்டிகள் நடைபெறுகின்றன. இதில் பொதுமக்களும் மாணவர்களும் பங்கேற்கலாம் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.4.2022 அன்று முதலமைச்சர் அவர்கள், "வடக்கே உதித்த சமத்துவச் சூரியன், பலர் வாழ்வில் கிழக்காய் இருந்த பகலவன்" நமது அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14ஆம் நாளை, "சமத்துவ நாளாக" கொண்டாடுவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது எனச் சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் அறிவித்தார்கள். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் ஆண்டுதோறும் சமத்துவ நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் வாயிலாக "சமத்துவம் காண்போம்" என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கு பெறும் வகையில் சமூக ஊடகங்களான எக்ஸ் தளம் (X), படவரி (Instagram), முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (YouTube) வாயிலாக 10.4.2025 முதல் 30.4.2025 வரை பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

"சமத்துவம் காண்போம்" என்கிற முழக்கம் சமூகநீதி (Social Justice) என்ற கருத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. தனிமனிதருக்கும், சமூகத்திற்கும் இடையேயுள்ள சமமான, நியாயமான உறவைக் குறிக்கிறது. தனிமனிதரின் சமூகச் செயல்பாடுகளுக்குத் தேவையானவற்றை நிறைவுசெய்து, பாகுபாடற்ற நீதியையும், நியாயத்தையும் நிலைநிறுத்துவதற்கான சூழலை உருவாக்குவதற்காகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதன்மூலம் மக்கள் அனைவருக்கும் சமமான நீதி, வேலை வாய்ப்புகள், பாதுகாப்பான வாழ்க்கை ஆகியவை அமைவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் இப்போட்டிகளில் வெற்றிபெறும் வெற்றியாளர்களை நேரில் சந்தித்து, அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்கள். எனவே, பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் அதிக அளவில் இப்போட்டிகளில் பங்கேற்குமாறும், தங்களது படைப்புகளை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.




போட்டிகளும், அதன் விதிமுறைகளும் பின்வருமாறு:

**போட்டி 1 : ஒரு கதை சொல்லட்டுமா?** (Story Telling)

தலைப்பு: சமூகநீதி அல்லது கல்வியின் முக்கியத்துவம் (அல்லது) உங்களுக்குப் பிடித்த இந்திய அரசியலமைப்புச் சட்டம் எது? என்பது குறித்துக் கதைகளைப் பதிவிட வேண்டும்.

வடிவங்கள் : ரீல்ஸ் (1 நிமிடம்) அல்லது ஒரு பக்கக் கதை.

**போட்டி 2: ஓவியம் வரைதல் போட்டி**(Drawing)

தலைப்பு : சமத்துவம் காண்போம்

அளவு : 1 MB,

**போட்டி 3: வினாடி வினாப் போட்டி**(Quiz)

தலைப்பு: அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) (அல்லது) இந்திய அரசியலமைப்பு அடிப்படைகள் (Indian Constitution Basics)

**போட்டி 4: மீம்ஸ் போட்டி**(Memes)

போட்டியாளர்கள் பெண் கல்வி, சமத்துவம் அடிப்படையில் மீம்ஸ்களை உருவாக்கி அனுப்பவேண்டும்.

அளவு : 1 MB

**போட்டி 5: வலையொலி** (Podcast)

தலைப்பு: "நான் அண்ணல் அம்பேத்கராக இருந்தால்" நீங்கள் அண்ணல் அம்பேத்கராக மாறினால், தற்போதைய உலகில் எந்தெந்த மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள்? (அல்லது) அண்ணல் அம்பேத்கரின் கொள்கைகள் இன்றைய காலத்திற்கேற்ற அதன் பங்கு.

அளவு : 1 முதல் 3 நிமிடங்கள் வரை (2 MB)

படைப்பாளிகள் தங்களது படைப்பினை ஒலி வடிவில் (தமிழில்) பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**போட்டி 6: உரிமைகளுக்கான** Rap **பாடல்** (Rap Singing)

அனைவரும் சமம் என்ற தலைப்பில் ஃப்ரீ ஸ்டைல் Rap செய்து ஒலி வடிவில் அனுப்ப வேண்டும்.

அளவு : 1 முதல் 3 நிமிடங்கள் வரை (2 MB)

**போட்டி 7: செல்ஃபி மற்றும் ஹாஷ்டாக் போட்டி** (Selfie and Hashtag)

அண்ணல் அம்பேத்கர் சிலை அல்லது போஸ்டர்களுடன் செல்ஃபி

"இந்திய அரசியலமைப்பு" புத்தகத்துடன் செல்ஃபி

அரசியலமைப்பின் முன்னுரையுடன் செல்ஃபி

#RiseforEquality என்ற ஹாஷ்டாக்குடன் பதிவுகளை உங்கள் சமூக ஊடகக் கணக்குகளில் பதிவிட்டு, TN DIPR சமூக ஊடகக் கணக்கை TAG செய்ய வேண்டும்.

உங்கள் நண்பர்கள் மற்றும் பின்தொடர்பவர்களும் #RiseforEquality என்ற

ஹாஷ்டாக்குடன் இப்பதிவுகளைப் பகிர்ந்து கொள்ளலாம். (அளவு: 1MB)

**போட்டி 8: சமூக ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வு** (Whatsapp and Instagram Outreach)

பங்கேற்பாளர்கள் தங்கள் Whatsapp status மற்றும் Instagram Storyல் அண்ணல் அம்பேத்கரின் மேற்கோள்கள் (Quotes) அல்லது அரசியலமைப்பின் முன்னுரையைப் பதிவிட வேண்டும். அதைத் தங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரையும் பகிர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும். அதிக எண்ணிக்கையிலான Status Screenshots பகிரப்பட்டதன் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மேற்கண்ட இப்போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் tndiprmhsamathuvamkanbom@gmail.com என்ற மின்னஞ்சல் மற்றும் கீழ்க்கண்ட விரைவு துலங்கல் குறியீடு (QR code) வாயிலாகத் தங்கள் படைப்புகளை 30.04.2025க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



இராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிறுத்தத்தில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் மாவட்டத்தில் நகரம் மற்றும் புறநகர்களுக்கு 10 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயுசந்திரகலா , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நகரமன்றத் தலைவர் சுஜாதா விநோத், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் கணபதி, தொ.மு.ச. தலைவர் ரமேஷ் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம், நகரச் செயலாளர் பி.பூங்காவனம், மாவட்டப் பிரதிநிதி எஸ்.கிருஷ்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் சீர்மிகு ஆட்சியில்

# பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு புதிய உச்சம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிக்கை!

சென்னை, ஏப்.12

முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு ஆட்சியில் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு புதிய உச்சம் பெற்றுள்ளது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு திராவிட மாடல் ஆட்சியின் கீழ் அனைத்து துறைகளிலும், அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறுகின்ற வகையில் கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சி விகிதத்தைவிட 2024-2025-ஆம் ஆண்டில் 9.69% வளர்ச்சி விகிதத்துடன் எல்லார்க்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின்படி அதிகபட்ச வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த வளர்ச்சி விகிதத்தில் கூட்டுறவுத் துறையும் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நல்ல வாய்ப்பினை எனக்கு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறும் இந்த திராவிடல் மாடல் ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் கூட்டுறவுத்துறையின் கீழ் பொது நகைக்கடன் தள்ளுபடி திட்டம் 2021-ன் கீழ் 11.83 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.4,918 கோடி அளவிற்கு தள்ளுபடி சான்றிதழுடன், அவர்கள் அடமானம் வைத்த நகைகளும் திருப்பி வழங்கப்பட்டுள்ளன.

சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி 2021-ன் கீழ் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களில், 31.03.2021 அன்றைய தேதியில் நிலுவை உள்ள கடன் தொகை ரூ.2,117 கோடியை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,01,895 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 10,56,296 மகளிர் பயன் பெற்றுள்ளனர்.

விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன்களை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வழங்குகின்றன. அதன்படி, 07.05.2021 முதல் 31.03.2025 வரை 68,01,609 விவசாயிகளுக்கு ரூ.54,968 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் 07.05.2021 முதல் 31.03.2025 வரை 12,28,416 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.6,610 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்ச வரம்பு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 07.05.2021 முதல் 31.03.2025 வரை 1,99.209 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.11,627 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட 19,791 பெண்களுக்கு 5 சதவீத வட்டியில் ரூ.65 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. சமூக நீதியை மேம்படுத்த 16,836 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.478 கோடியும், 51,795 மகளிர் தொழில்முனைவோருக்கு ரூ.298 கோடியும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளை சுயசார்புடையவர்களாக மாற்றவும், நிதி சுதந்திரத்தை வளர்க்கவும், 07.05.2021 முதல் 31.03.2025 வரை 48,353 பயனாளிகளுக்கு ரூ.232 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் சிறப்புத்திட்டமான குடும்பத்திற்காக அயராது உழைக்கும் மகளிரை கௌரவிக்கும் பொருட்டு, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்' கீழ் உரிமைத் தொகை பெறுவதற்காக இதுவரை 8 இலட்சத்து 35 ஆயிரம் வங்கிக் கணக்குகள் மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மாற்றுப் பாலினத்தவர்கள், அவர்தம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை நிதிச் சேவைகளைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களைக் களைந்து, அவர்களின் பொருளாதார ரீதியான உள்ளடக்கத்தை உறுதி செய்யும் பொருட்டு 'சிறகுகள்' சிறப்புக்கடன் திட்டம் நவம்பர் 2024-ல் அறிமுகப்படுத்தப்பட்டு, 5% அளவிலான மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ரூ.1,00,000 வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 31.01.2025 வரை 105 மாற்றுப்பாலினத்தவர்களுக்கு ரூ.1.14 கோடி அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் பாதித்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் தனி நபருக்கு ரூ.10,000/- வரை சிறப்பு சிறு வணிக கடன் திட்டத்தின் கீழ் 14,647 சிறு வியாபாரிகளுக்கு, 15 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள சிறு வியாபாரிகளுக்கு தனிநபருக்கு ரூ.1.00 லட்சம் வரை 10,301 சிறு வியாபாரிகளுக்கு ரூ.26.12 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கால்நடைகளை வாங்குவதற்காக5,966விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்புக் கடன் ரூ.26.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**சிறு வணிகக் கடன்!**

ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தனிநபருக்கு ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை சிறப்பு சிறு வணிக கடன் திட்டத்தின் மூலம் 339 சிறு வியாபாரிகளுக்கு, 1.69 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களால் சுதந்திர தின உரையில் 1000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும் எனவும் இதன் மூலம் ஜெனரிக் மருந்துகள், பிரண்டட் மருந்துகள், நியூட்டராசெட்டிகல்ஸ் மற்றும் இந்திய மருந்துகள் மக்களுக்கு 25% தள்ளுபடி விலையில் வழங்கப்படும். என அறிவித்தார்கள் அதன்படி தற்போது முதலமைச்சர் அவர்களால் 1000 முதல்வர் மருந்தகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1500 தொழில்முனைவோர் மற்றம் மருந்தளுநர்கள் நேரடி வேலைவாய்ப்பை பெறுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு 1,94,35,771 குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு நியாயவிலைக்கடைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற எந்த திட்டமாக இருந்தாலும் மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதில் என்றென்றும் கூட்டுறவுத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது.

குறிப்பாக சொல்ல வேண்டுமேயானால் மகளிர் நலன் சார்ந்த திட்டங்கள், மாணவர் நலன் சார்ந்த திட்டங்கள், ஏழை, எளிய மக்களின் நலன் சார்ந்த திட்டங்கள், தொழிலாளர்கள், உழைக்கும்வர்கத்தினர் என எண்ணற்ற திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

**ரூ.10.14 லட்சம் கோடி முதலீடு!**

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நல்ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 895 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ,10,14,368 கோடி மூதலீடுகளை ஈர்த்து, 32,04,895 வேலை வாய்ப்புகளை உருவாக்கியதன் விளைவு, 2021-2022-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8%க்கும் அதிகமான வளர்ச்சி விகிதத்துடன் நிலையான பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு, கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சி விகிதத்தைவிட 2024-2025ஆம் ஆண்டில் 9.69% வளர்ச்சி விகிதத்துடன் எல்லார்க்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின்படி அதிகபட்ச வளர்ச்சி அடைந்துள்ளது என்பதில் நாம் பெருமிதம் கொள்வோம்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### சென்னை மாநகராட்சி

# மணலி - மாதவரம் மண்டலங்களில் வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## மேயர் ஆர்.பிரியா ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, ஏப். 12-

பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணலி ஏரி, மாதவரம் ஏரி மற்றும் கடப்பாக்கம் ஏரி புனரமைப்புப் பணிகள், புதிதாக கட்டப்பட்டு வரும் சமூக நலக் கூடப் பணி மற்றும் மயானபூமி மேம்பாடு உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்தும், மஞ்சம்பாக்கம் நகர்ப்புர சமுதாய நல மையம் மற்றும் அம்பேத்கர் தெரு குழந்தைகள் மையத்தின் செயல்பாடுகள், பாடசாலை தெரு சென்னை பள்ளியில் மேற்கொள்ளப்படும் மாணவர்கள் சேர்க்கை குறித்தும் மேயர் ஆர்.பிரியா இன்று (11.4.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மேயர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் இன்று மணலி மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.4.73 கோடி மதிப்பில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் இந்த ஏரியிலிருந்து வெளியேறும் உபரிநீரினால் இந்தப் பகுதியில் நீர்த்தேக்கம் ஏற்படுகிறது. வருகிற ஜூன் அல்லது ஜூலை மாதத்திற்குள் இந்தப் பணிகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2025-26ஆம் கல்வியாண்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை நடைபெற்று வருகிறது. சென்னை பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டமைப்புகள், பள்ளிகளின் செயல்பாடுகள், மாணவர்களின் கல்வித்திறன் செயல்பாடு குறித்து பொது மக்களுக்கு விளக்கிக் கூறி மாணவர்கள் சேர்க்கையினை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் பாடசாலை தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் மேற்கொள்ளப்படும் சேர்க்கைப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, புதிதாக சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களுடன் கலந்துரையாடி, ஏற்கனவே அப்பள்ளியில் பயிலும் மாணவர்களிடம் பள்ளியில் உள்ள அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்து, இன்னும் என்னென்ன வசதிகள் தேவை என்பது குறித்தும் கேட்டறியப்பட்டுள்ளது.

மேலும், இந்தப் பகுதியில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடப் பணி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் வட சென்னைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வடசென்னைக்கு இது ஒரு முத்தாய்ப்பான திட்டமாகும்.

இந்த மணலி மண்டலமானது 2011ஆம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. மேலும், மாதவரம், திருவொற்றியூர், சோழிங்கநல்லூர், பெருங்குடி ஆகிய மண்டலங்களும் இணைக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் இந்தப் பகுதிகளில் எந்தவொரு வளர்ச்சித் திட்டப் பணிகளும் நடைபெறாத சூழல் இருந்தது. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டாலும் மாநகராட்சி சார்பாக எந்தவொரு வகைப்பாட்டு மாற்றங்களும் மேற்கொள்ளப்படாத சூழல் இருந்தது. அந்த நிலை தற்போது முற்றிலுமாக மாற்றப்பட்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தியுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி (பணிகள்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), மண்டலக்குழுத் தலைவர்கள் ஏ.வி. ஆறுமுகம் (மணலி), எஸ்.நந்தகோபால் (மாதவரம்), மாமன்ற உறுப்பினர்கள் அ.சந்திரன், அ.தீர்த்தி, க.கார்த்திநாதன், ஆர்.ஜி. ராஜேஷ் சேகர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் இல்லந்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கையை மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் . உடன் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் மு.பாபு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாணவர் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.